UNIVERSITY OF ... LANKA RECEIVED 10-2-1986 PERIODICALS DIVISION ... LIBRARY

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 தை 26 ஐ, அவ் 28 இதழ் 362
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8 2 1986

## காரைநகர், காவலூர் பகுதிகளில் பதற்றநிலை

[நமது வேலணை நிருபர்]

காரைநகர் கடற்படையினர் நேற்றுக்காலை 10 மணியளவில் திடீரென மேற்கொண்ட பீரங்கி மோட்டர் ஷெல்தாக்குதல்களினால் காரைநகர், ஊர்காவற்றுறை பகுதிகளில் பல மணித்தியாலங்களாக பதற்றநிலை ஏற்பட்டிருந்தது.

இப்பகுதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் மிகுந்திருந்த நேரத்திலேயே இத்திடீர்த் தாக்குதல் இடம்பெற்றது

இத்தாக்குதலின் காரணமாக ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பருத்தியடைப்பு, காரைநகர் பகுதிகளில் 15

[5ம் பக்கம் பார்க்க]

## கட்டுமரத்தில் சென்றவர் பலி!

(யாழ்ப்பாணம்)

காரைகரிலிருந்து முடிவெட்டுவதற்காக நேற்றுக்காலை ஊர்காவற்றுறையை நோக்கி கட்டுமரத்தில் சென்ற கந்தசாமி பாலன் (17 வயது) என்பவர் ரோந்துக் கப்பலில் இருந்து

(8ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவிடம் இராணுவ உதவி

# ஈ.ழ.தே வி. முன்னணி கோரியுள்ளது

## செய்தியாளர் மாநாட்டில் லலித் தகவல்



(இ. [illegible])

"ஈழதேசிய விடுதலை முன்னணி இந்திய அரசாங்கத்திடம் இராணுவ உதவி கோரியுள்ளது. இதனை நாம் நன்கு அறிவோம். இனப் பிரச்னைக்கு இராணுவத் தீர்வொன்றினைக் காணவே தீவிரவாதிகள் முயலுகின்றனர்

இராணுவத் தீர்வையே தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத் தலைவர் உமா மகேஸ்வரனும் அண்மையில் சென்னையில் விடுத்திருந்த அறிக்கையில் வலியுறுத்தியிருந்தார்" என்று நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கூறினர்.

(5ம் பக்கம் பார்க்க)

## 'ரொமேஷ்' விஜயத்தின் பின்னணிபற்றி 'இந்து'

(சென்னை)

"தமிழ் விடுதலைப்போராளிகளுக்கும் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரிக்குமிடையில் ஜனவரி இரண்டாம் திகதி சென்னையில் ஏற்பட்ட சந்திப்பின் பின்னரே திரு. பண்டாரியின் இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டது எனக் கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்ற பொழுதிலும், திரு. பண்டாரியின் இலங்கை விஜயத்தை ரத்துச்செய்யும் தீர்மானம் ஜனவரி முதலாம் திகதியே டில்லியில் எடுக்கப்பட்டு விட்டது" என்று சென்னை 'இந்து'

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் இப்படியும் 'அத்துமீறல்'

(யாழ்ப்பாணம்)

கடந்த சில காலமாக யாழ். அரசினர் வைத்தியசாலையை அவமதிக்கும் விதமாக ஒருசில ஆயுதந்தாங்கிய இனந்தெரியாத நபர்கள் நடந்துகொள்வது அங்கு கடமையாற்றும் ஊழியர்களுக்கும், நோயாளர்களுக்கும் மனவேதனையைத் தருவதாக உள்ளது" என்று யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும்

(5-ம பக்கம் பார்க்க)

# பாதுகாப்புவலயத்தை தவிர எமக்கு மாற்றுவழி இல்லை

[கொழும்பு]

"நாங்கள் மிக நவீன ஆயுதங்களைப் பாவிக்கிறேம். ஒரு 'சுற்றில்' 60 தோட்டாக்கள் உள்ளன. இந்நிலையில் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாது. தவிர, அப்பாவிப் பொதுமக்களையும் தீவிரவாதிகளையும் இனங்காணுவது சிரமமான காரியம். உதாரணமாக தீவிரவாதியின் கையிலிருக்கக் கூடிய ஒரு கிரெனெட்'வெடித்ததுமே. அதுஅவரது கையிலிருந்துவிடுபட்டு அவர்வெறுங்கையுடன் நிற்பார். அவரை ஒரு அப்பாவி பொதுமகன் என்று கொள்வதா அல்லது தீவிரவாதி என்று கொள்ளுவதா?"

"விடுதலையைக் காணுவது என்று பிடிவாதம் கொண்டுள்ள தீவிரவாதிகளுக்கும் அவர்களை ஒழித்துக் கட்டியே தீருவது என்று நிற்கும் ஆயுதப்படைகளுக்குமிடையிலான சண்டைகளில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதை தவிர்க்க முடியாதா?" என்று 'ஈழநாடு' நிருபர் நேற்

(5-ம் பக்கம் பார்க்க)

## சிறிமாவுக்கு அரபாத் வாழ்த்து

(கொழும்பு)

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பாராளுமன்ற பிரவேசம் பயனுடையதாகஅமையத் தனது நல்வாழ்த்துக்களை பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் தெரிவித்துள்ளார்

இது சம்பந்தமாக திருமதி பண்டாரநாயக்காவுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள செய்தியொன்றில், தனது நட்புறவையும, ஒத்துழைப்டையும் நல்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## ஆனையிறவில்

[கிளிநொச்சி]

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை கேட்ட பலத்த துப்பாக்கிச் சத்தங்களால் பிரயாணிகள் மத்தியில் பெரும் பதட்டமும் மரண பயமும் உருவாகியது.

இச்சம்பவத்தால் யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவு நோக்கி வந்து கொண்டிருந்த வாகனங்கள் இயக்கச்சியிலும் யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த வாகனங்கள் [illegible]னிலும் சிலமணிநேரம் [illegible] நிற்க நேரிட்டன. (மா)

## வெளிநாட்டு நிருபர் பேட்டி கண்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றுப்பிற்பகல் வெளிநாட்டுப்பத்திரிகையாளர் ஒருவர் பஸ்நிலையத்தில் நின்றுகொண்டு அங்கு குழுமியிருந்த பலதரப்பட்ட மக்களையும் வீடியோ' மூலம் படம் எடுத்து பேட்டியும் கண்டார்.

ஆண், பெண் என்று ஏராளமானமானவர்கள் பேட்டி கொடுத்தனர். இதனல் சிறித நேரம் ஆஸ்பத்திரி வீதியில் போக்குவரத்து தடைப்பட்டது.

இந்த ரி.வி, வானெலி பத்திரிகை நிருபர் யாழ். மாவ[illegible] [illegible]ளுக்கும் சென்று அதிகளையும் பேட்டிகண்டார். (ஐ)

## தொண்டமானாறு சம்பவம்: விடுதலைப்புலிகள் அறிக்கை

(சென்னை)

தொண்டமானாறு இராணுவ முகாமுக்கு அண்மையில் வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பொழுது 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நேற்றுக்காலை தொண்டமானாறு முகாமுக்கு அண்மையிலுள்ள பெரிய பாலத்தடியில் இரவுப் பாதுகாப்புக் கடமையலீடுபட்டிருந்தவர்கள் ட்ரக் ஒன்றில் ஏறி முகாமுக்குச் சென்ற அதேசமயம் அவ்விடத்தில் பகல் கடமைக்கு இராணுவத்தினர் அமர்ந்திருந்தனர். ட்ரக்கில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது

(5-ம் பக்கம் பார்க்க)

## தொடர்ச்சியான வெடிச் சத்தம்

[யாழ்ப்பாணம்]

தொண்டமானாறு பகுதியில் நேற்றுக்காலை குண்டுகள் வெடித்த சத்தம் தொடர்ச்சியாகக் கேட்ட வண்ணமிருந்தது.

தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து பல தடவைகள் 'மோட்டர்ஷெல்' குண்டுகள் ஏவப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## பாப்பரசர் வழங்கிய தங்கப்பதக்கம்

(சென்னை]

பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது அவரது வாகனத்தை ஓட்டி வந்த திரு. வெங்கடசாமி என்பவருக்கு, தங்கப் பதக்கமும் 1000 ரூபா பணமும் அன்பளிப்பாக பாப்பரசரால் வழங்கப்பட்டுள்ளன

இவர் சென்னை நகர பொலிஸ் பகுதியில் சாரதியாகக் கடமையாற்றிவருகிறார். [ச]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

தச்சன்தோப்பு சந்தி கிராம சபைக்கு முன்பாக 12 பரப்புக் காணிவீட்டுடன் உடன்விற்பனைக்குண்டு. துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். க.முத்தையா, தச்சன்தோப்பு, கைதடி. [C629]

நல்ல நிலையிலுள்ள A35 கார் 2 Sri 3000 தொடர் இலக்கம். உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்; ஏரம்பு தவசோதி, 131/1 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [C622]

''லான்மாஸ்ரர் பெட்டி'' உடன்விற்பனைக்கு. விபரங்களுக்கு: செல்லர்-கருணாகரன், சுதுமலை கிழக்கு, அரசடி ஒழுங்கை, புளியிட்டி, சுதுமலை. (C625)

உரும்பராய் தெற்கு பலாலி வீதியில் சகல வசதிகளுடன் வீடும் மூன்றரைப் பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் தொடர்புகொள்க: இராசதுரை, 45, மூன்ரும் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [C505]

ஹொண்டா (Honda) ஜெனரேட்டர் 1500 வாட்ஸ் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சொனிக்ஸ் மினிசினிமா, 95, யாழ் வீதி, மானிப்பாய். (C 606)

பண்ணை பன்றி இறைச்சி வரணிப் பண்ணையில் வளர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட இறைச்சி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: (1) வரணிமிஷன் விற்பனை நிலையம் நவீனசந்தை, யாழ்ப்பாணம், (2) மிஷன் விற்பனை நிலையம் இணுவில். (3) மிஷன் விற்பனை நிலையம் தெல்லிப்பழை. (C 612)

## விற்பனைக்கு

Broilers இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம் — நல்லூர் வீடியோ சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். C 479

வெளிநாடு செல்லும் டாக்டர் ஒருவரின் வீட்டுத் தளபாடங்கள், Writing table, மேசைகள், கட்டில்கள், Hoover floor polishers, Sanyo மின் விசிறிகள், Pyrex வெளிநாட்டு கிளாஸ் வகைகள், வெளிநாட்டு சாய்வு நாற்காலிகள், ரெக்கோட் பிளேயர், கம்பளங்கள், துணிவகைகள், மற்றும் பல பொருட்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பத்மநாதன், C/o அம்பலவாணர், ஆடியபாதம் றோட். திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக்கல்லூரிக்கும் இடையில். (C 607)

## வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ அன்ட் ரீ. வி., மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது. தொடர்பு:-VispaEngineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 578

E. C. E.-I (London) 87 15-02-1986 ஆரம்பமாகின்றன. E. C. E.-II (London) 86/87, Draughtsmanship, Quantity Surveying [City and Guilds] நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நேரில் வந்து தொடர்புகொள்ளவும்: அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [C 458]

## தேவை

கைக்கடிகாரம் மேசைமணிக்கூடுகள் திருத்துவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. சம்பள விபரம் நேரில் தொடர்புகொள்ளவும். தேவன் வோர்ச் வேக்ஸ், பஸ்நிலையம் முன்பாக, சுன்னுகம். C-547

அலுமினியப் பாத்திரம் போடுபவர், உதவியாளர், பயிலுனர் தேவை. நேரில் வரவும். தொடர்பு: பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C605)

பாண் பேக்கரிக்கு நல்ல அனுபவம் வாய்ந்த பேக்கர் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். இந்திரா பேக் ஹவுஸ், பாலாவோடை சந்தி, காரைநகர். (C-613)

யாழ். நகரில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் பின்வரும் தொழில்களுக்கு ஆட்கள் தேவை. 1] பேக்கரிவேலை, [2] சமையல் பகுதி கையுதவி, [3] சப்ளையர்கள். உடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. A208, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். [A208]

### WANTED

Wanted an English / Tamil Typist to work part time. Knowledge in Short - hand preferred. Apply: Advt. No. A 194, C/o Eelanadu, Jaffna. (A 194)

### WANTED

Wanted a Doctor [R.M.P] or [M.B.B.S] for a dispensary Please contact: 59, Victoria Road, Jaffna. (C635)

### CHANGE OF NAME

I Mohamed Fareed Nagoor of No: 58, Muslim College Road, Jaffna do hereby inform the general public that my third child who has been known as Fathima Shitanoon will henceforth be known as Fathima Shifana. [C634]

## கல்வி

க.பொ.த (உயர்) 86 மாணவர்களுக்கு ஞாயிறுதோறும காலை 10-12 கலை/வர்த்தக வினாவிடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Modern Education Centre, Karaveddy. [C593]

G.C,E.[O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதம் 17வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேடசித்திக்கு நுணுக்கமான முறையில் வீடுகளிற்சென்று கற்பிக்கப்படும். மற்றும் G.C E(O/L] [A/L] சகலபாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் வீடுகளிற்சென்றுகற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி, or 252, ரூபன் ஸ்ரோர், நாவலர் றோட், யாழ்ப்பாணம். [C632]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றில்

திருநெல்வேலி, மணற்தறை ஒழுங்கை, காலம் சென்ற பண்டாரம் தம்பிப்பிள்ளை சண்முகநாதன் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

-மரணமெய்தியவர்

வழ. இல: ரி/3931

பி. ரி. சண்முகநாதன் கைம்பெண் இராசம்மா, இல. 6, மணற்தரை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

- மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு மாசி மாதம் 28ந் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 529)

## மாதகலில் தொழில் பயிற்சி நிலையம்

(பண்டதரிப்பு)

மாதகல் சுகாதார மனித சேவைகள் கழகம் மாதகல் பகுதியிலுள்ள பாடசாலையில் விட்டு விலகிய மாணவர்களினதும், யுவதிகளினதும் நலன் கருதி தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை இம் மாதம் தொடக்கம் ஆரம்பித்துள்ளது இதன் திறப்பு விழா கழகத் தலைவர் திரு. க. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றது.

பண்டதரிப்பு ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. இ. இராசசுந்தரம் மங்கள விளக்கேற்றினர்.

மாதகல் பங்குத் தந்தை அருட் திரு. கிங்ஸ்லி சந்தியாப் பிள்ளை அடிகள் பயிற்சி நிலையத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்து உரையாற்றுகையில் இன்றைய காலகட்டத்தில் தொழிற் பயிற்சிகளின் அவசியம் பற்றியும் இப்பகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இந்த தொழில் பயிற்சி நிலையம் ஒரு பெரும் வரப்பிரசாதமாக விளங்குகின்றது என்றும், இதனை அனைவரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மோட்டார் எந்திரவியல், மின் இணைப்பு, தையல் கலைப்பயிற்சி, பூவேலை தோல் பொருட்கள் தயாரிப்பு ஆகிய பல்வேறு பயிற்சிகள் இந்த நிலையத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

## தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது). கேள்விப்பத்திரம்

மேற்படி எமது சங்கத்தில் 10,000 வெற்றுக் சாக்குகள், மீன்தூள் 5000 கிலோ சிப்பிதூள் 3600 கிலோ, எலும்புத்தூள் 1000 கிலோ ஆகிய பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு. மேலும் விபரங்கள் கேள்விப்பத்திரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. ரூ. 500/- வைப்புப் பணமாகத் தலைமைக் காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தைப்பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்பம் 14-2-86ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், ப நோ.கூ. சங்கம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வெற்றுச்சாக்குபழுதடைந்த பொருட்களுக்கான கேள்விப்பத்திர '' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் 14- -86ம் திகதி பி.ப 4-00 மணிக்கு உப சபையினர் முன்னிலையில் திறக்கப்படும்.

பொதுமுகாமையாளர்.
86-02-06. (A 207)



உ

## விவாக சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் தை மாதம் 28-ந் திகதி (10-02-86) திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு வரும் இடப லக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| புங்குடுதீவு கிழக்கு — கலட்டி வரசித்தி விநாயகர் தேவஸ்தான குரு பிரம்மஸ்ரீ சொ. பஞ்சாட்சர ஐயர் தம்பதிகளின் புத்திரன் சிரஞ்சீவி **கிருஷ்ணராஜ சர்மா** அவர்களுக்கும் | ஐயர்வீதி, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி சிவஸ்ரீ பா. சுவாமிநாதக்குருக்கள் தம்பதிகளின் சிரேஷ்டபுத்திரி சௌபாக்கியவதி **ஜானகி** அவர்களுக்கும் |

யாழ். நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் பாணிக்கிரகண மாங்கல்யதாரணம் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்பசமேதரராக சமுகமளித்துமணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்ருேம்.

வரவேற்புபசாரம்:
11-2-86 செவ்வாய்க்கிழமை பகல் 11 மணி முதல் மணமகனில்லம், புங்குடுதீவு.
12-2-86 புதன்கிழமை மாலை 5 மணிக்கு மணமகளில்லம், சாவகச்சேரி.

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| பிரம்மஸ்ரீ சொ. பஞ்சாச்சர ஐயர் தம்பதிகள், கலட்டி வரசித்தி விநாயகர் தேவஸ்தானம், புங்குடுதீவு. | சிவஸ்ரீ பா. சுவாமிநாதக்குருக்கள் தம்பதிகள், ஐயர் வீதி, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. |

(இரு வீட்டார் அழைப்பு) (C 618)

## நன்றி தெரிவித்தல்

30-01-1986ல் இருந்து 06-01-1986வரையில் எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, மனிதாபிமானத்துடன் என்னை நடாத்தி, விடுதலைசெய்த மக்கள் விடுதலைக் கழகம் P L.O.T. தோழர்களுக்கு நானும் என் குடும்பத்தவர்களும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

அத்துடன் ''தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழகம்'' எனது விடுதலைக்காக எம்மிடமிருந்து எவ்வித பண உதவியோ பொருள் உதவியோ பெறவில்லை என்பதையும் அனைவருக்கும் தெரியப்படுத்துகின்ருேம்.

க. செல்லையா
குடும்பத்தினர்.
(7-1-86)

3-ம் கட்டை,
அரியாலை, யாழ்ப்பாணம். [C 637]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பினத்தவர் ஜனதிபதியாகும் வாய்ப்பு?

# தென்னுபிரிக்காவில் அரசியல் சீரமைப்பு

(பிறிடோரியா)

**தென்னுபிரிக்காவில் வாழும் பல்வேறின மக்கள், அதிகாரத்தைப் பகிரும் முறையொன்றில் உடன்பட்டார்களேயானுல் எதிர்காலத்தில் கறுப்பினத்தவர் ஜனதிபதியாக வருவார் என்று தென்னுபிரிக்க வெளிநாட்ட மைச்சர் திரு. பீட் போத்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

கடந்தவாரம் தென்னுபிரிக்க ஜனதிபதி திரு. பிக் போத்தா, நிறவெறிப்பாகுபாட்டுக் கொள்கையை பழமைவாய்ந்ததென்றுஅது விரைவில் இல்லாதொழிக்கப்படும் எனக் கூறியிருந்தார்.

இதற்குக்கருததுத் தெரிவித்துப் பேசுகையிலேயே திரு. பீட் போத்தா இவ்வாறு கூறினுர்.

தென்னுபிரிக்காவில் ஆளும் கட்சியைச் சேர்ந்த இரு முக்கியஸ்தர்களின் இந்த பேச்சுக்கள், தென்னு பிரிக்காவில் விரைவில் அரசியல்சீரமைப்புக்கள் கொண்டுவரப்படலாம் என்பதற்கு முன்னுேடிக்கருத்துக்களாக இருக்கலாம் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். [செ]

## கொலைக்குற்றத்தின்பேரில் பௌத்த மதகுரு கைது!

(கொழும்பு)

தனது சகமதகுரு ஒருவரைக் குத்திக் கொலை செய்த குற்றத்தின் பேரில் மருதானை பிரதங்கார பௌத்த ஆலயத்தைச் சார்ந்த ஒரு பௌத்த மத குரு கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்

சந்தேகநபரான பௌத்த குரு ஒரு சட்டவியல் மாணவரென்றும் அவர் மற்றைய மத குரு ஆலயப் பிரசாரத்தைப் பெருக்கிக் கொண்டிருந்த நேரத்திலேயே அவரைக் கத்தியால் குத்தினுர் என பொலிசார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சந்தேகநபரின் நடத்தைபற்றி ஏற்கனவே பொலிஸாரிடம் பல புகார்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தசெனவும் பொலிஸார் மேலும்தெரிவித்தனர்.

கத்திக்குத்துக்கு இலக்காகிய 28 வயதான மதகுரு கிரிந்த புன்யஸார தேரோ கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சொற்ப நேரத்தில் காலமானுர்.

## பாக். மனித உரிமைகளை மீறுகிறது!

## ஆப்கான் குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

மனித உரிமைகளை பாகிஸ்தான் மீறிவருகிறது என்று ஆப்கானிஸ்தானின் ஐ நா தூதுவர் திரு.சாரிவ் குற்றஞ் சாட்டியுள்ளார்.

திரு. சாரிவ் இதுபற்றிக் கூறுகையில், கடந்த டிசமபர் மாதம் முதல் பாகிஸ்தானிய இராணுவம், தனது எல்லைப் பிரதேசமான கைபாகணவாயில் வாழும் பழங்குடி மக்கள் மீது மிருகத்தனமாக தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது என்ருர்.

உலகச் செய்திகள்

இப்பிரதேசத்தில் வாழும் பழங்குடி இனத்தவரை பாகிஸ்தான் ராணுவம் பீரங்கிகள், டாங்கிகள், விமானங்களைப் பாவித்துக் கொன்று இவர்களின் வசிப்பிடங்களைத் தரை மட்டமாக்கி வருகிறது எனவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இப்பிரதேசத்தினூடாக நடைபெறும் போதைவஸ்துக் கடத்தலை முறியடிப்பதற்காகவே கைபர் கணவாயில் தனது ராணுவம் நிலைகொண்டுள்ளது என்றுகூறியுள்ள பாகிஸ்தான், அப்பிரதேசத்தில் பத்திரிகையாளர்உட்படவெளியார் எவரையும் பிரவேசிக்கத் தடைவிதித்துள்ளது. (செ)

## இத்தாலிய தூதரக அதிகாரிகளுக்கு

## சோவியத் வெளியேற்ற உத்தரவு!

(மாஸ்கோ)

சோவியத் யூனியனிலுள்ள இத்தாலிய தூதரகத்தின் இரு அதிகாரிகளை 24 மணி நேரத்துள்நாட்டை விட்டு வெளியேறுமாறு சோவியத் யூனியன் பணித்துள்ளது.

இத்தாலியிலுள்ள சோவியத் தூதரக அதிகாரிகள் இருவரை இத்தாலி வெளியேற்றியதற்கு பதிலடியாக இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெளியேறுமாறு பணிக்கப்பட்டவர்கள் இத்தாலியத் தூதரகத்தின் முதலாவது செயலாளரும், இன்னெருவர்த்தகப் பிரமுகருமாவர்.

சோவியத்துக்காக உளவு வேலைகளில் ஈடுபட்டனர். என்று குற்றஞ்சாட்டி முன்னர் இத்தாலி தனது நாட்டிலுள்ள இந்த இரு சோவியத் அதிகாரிகளையும் வெளியேற்றியது.

இந்த வாரத்தில் இவ்வாறு சோவியத் யூனியன் தனது நாட்டிலுள்ள சில வெளிநாட்டதிகாரிகளை வெளியேறுமாறு பணித்தது இது இரண்டாவது தடவையாகும்.

இதற்கு முன்னர் பிரான்ஸ் தனது நாட்டிலுள்ள சோவியத் தூதரக அதிகாரிகள் நால்வரை வெளியேறுமாறு பணித்ததைத் தொடர்ந்து அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக தனது நாட்டிலுள்ள பிரேஞ்சு தூதரக அதிகாரிகள் நால்வரை வெளியேறுமாறு பணித்திருந்தது தெரிந்ததே. (செ)

## கண் டாக்டரின் கார் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

கண் வைத்திய நிபுணர் எஸ். அருணுசலத்தின் காரை அடுத்த நாள் திருப்பித்தருவதாகக் கூறி சில தினங்களுக்கு முன் ஆயுத முனையில் அபகரித்துச் சென்றவர்கள் இன்னமும் திருப்பித் தரவில்லையாம்

கடந்த 4ம் திகதி டாக்டர் அருணுசலத்தின் திருநெல்வேலியிலுள்ள இல்லத்தில்வைத்து அடுத்த நாள் திருப்பித்தருவதாகக் கூறி ஆயுதம் தரித்த நபர்கள் அவரது 'ஆடி' காரை அபகரித்துச் சென்றனராம். நேற்று முன் தினம் யாழ் நகரில் சிவன்கோவிலுக்கு அருகாமையில் அக்கார் இலக்கத்தகடு இன்றி செல்வதைக் கண்டு உரிமையாளரால் மறிக்கப்பட்ட போதிலும் நிறுத்தாமல் கொண்டு செல்லப் பட்டதாம்.

டாக்டர் அருணுசலம் யாழ்ப்பாணத்தில் மாத்திரமின்றி மூளாய், சங்கானைப் பகுதிகளுக்கும் கண் அறுவைச்சிகிச்சைகளுக்காக சென்று வருபவர் என்றும் கார் கடத்தப் பட்டதால் பல கண் நோயாளர்களுக்கு அவசர சிகிச்சையளிக்கச் செல்ல முடியாமல் இருப்பதாகவும் தெரிய வருகிறது.

## சோவியத்யூனியன் எண்ணை ஏற்றுமதி

(மாஸ்கோ)

சோவியத்யூனியனின் தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எண்ணெய் எரிவாயு உற்பத்தி 1990 ம் ஆண்டில் 63-64 கோடி தொன்னுக உயரும் இதனுல் உள்நாட்டு தேவை பூர்த்தியாகும் ஏற்றுமதி வாய்ப்புகளும் அதிகரிக்கும் என்று இங்கு அறிவிக்கப்பட்டது

1986-1990 ம் ஆண்டுகளுக்கும் பின்னர் கி பி 2000ம் ஆண்டுடன்முடிவடையும் காலகட்டத்திற்குமான இலக்குகள் பற்றி அண்மைக் காலத்தில் மேலை நாடுகளின் பத்திரிகைகள் ஐயப்பாடு தெரிவித்துள்ளன, சோவியத் எரிபொருள் மற்றும் சக்தி உற்பத்தியாற்றலை ஆராயாமல் 1984-1985ல் எண்ணெய் உற்பத்திக் குறைபற்றிக் குறிப்பிடு கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

1986ல் எண்ணெய் உற்பத்திக்கான முதலீடு 31 சத விகிதம் அதிகரிக்கும். எண்ணெய் கிணறுகளை இயந்திர மயமாக்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நவீன முறைகள் கையாளப்படுகின்றன. மேந்கு சைபீரியாவிலும் கஜகஸ்தானிலும் புதிய எண்ணெய்ப் படிவங்கள் அபிவிருத்தி செய்யப் படுகின்றன எண்ணெய்ப் படிவங்கள் உள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி கணிசமாக அதிகரிக்கப்படும். என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## உளவாளிப் பரிமாற்றம்! போலந்தும் ஊர்ஜிதம்

(வார்ஸோ)

கிழக்கு-மேற்கு உளவாளிகள் பரிமாற்றம் நடக்குமென போலந்து அரசாங்கம் ஊர்ஜிதம் செய்துள்ளது.

இந்த பரிமாற்றம் அடுத்த செவ்வாய்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருபகுதியினரும்தலா ஆறு எதிர்ப்பகுதி உளவாளிகளை விடுவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது. இவர்களில் போலந்துக்காக உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேற்கு ஜேர்மனியில் சிறைவாசம் அனுபவித்து வரும் ஒருவரும், சோவியத் நாட்டுக்கு உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் தென்னுபிரிக்க கடற்படையைச் சேர்ந்த டீட்டர் கொர்ஹாத் என்பவரும், சோவியத் நாட்டைச் சேர்ந்த அனடோரிஸ்வாரன்ஸ்கியும் அடங்குவர்.

இதற்கு முன்னர், கிழக்கு ஜேர்மனியும் இந்தபரிமாற்றம் நடைபெறுமென ஊர்ஜிதப்படுத்தியது. ஆயினும் மேற்கு நாடுகள் எதுவும் இதுவரை இத்தகவலை ஊர்ஜிதப் படுத்தவில்லை. (செ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கிழக்கு நாராயணக் கிராம அபிவிருத்தி சங்கத்தினதும் சன சமூக நிலையத்தினதும் 34 வது பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் 9 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

கிராம அபிவிருத்தி அதிகாரி திருமதி பாலசுப்பிரமணியம் நாகேஸ்வரியும் போஷகர் நல்லூர் உதவி அரச அதிபர் திரு சிவகுருநாதனும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்.

## பொற்கோயில் ஒழுங்கைப் பேண புதிய உடன்படிக்கை

(சண்டிகார்)

பஞ்சாப்பின் ஆளுங்கட்சியான அகாலிதாள் சீக்கிய பொற்கோயில் நிர்வாகக் குழுவுடன் கோயிலிலிருந்து சீக்கியத் தீவிரவாதிகளை அகற்றுவது சம்பந்தமாக உடன்பாடொன்றைச் செய்துள்ளது.

அமிர்தசரஸில் உள்ள இந்த பொற்கோயிலில் அமைதிகாக்கும் படையொன்று நிறுவுவதென்றும், அப்படையில் ஓய்வு பெற்ற சீக்கிய இராணுவ சிப்பாய்களே அங்கம் வகிப்பர் என்றும் உடன்படிக்கை கூறுகிறது.

இந்த உடன்படிக்கை, [illegible] பொற்கோயிலிருந்தும் மற்றும் சீக்கியப் புனிதஸ்தலங்களிலிருந்தும் தீவிரவாதிகளை வெளியேற்றுமாறும் நிர்வாக சபை கோருகிறது.

பொற்கோயிலை அகில இந்திய சீக்கிய மாணவர் சம்மேளனத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் அண்மையில் கொண்டு வந்தனர்.

இதனிடையே பஞ்சாபிலுள்ள சகல கல்வி ஸ்தாபனங்களையும் இன்று மூடிவிடுமாறு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. அகில இந்திய சீக்கிய மாணவர் சம்மேளனம் இன்று [illegible] தவிருப்பதனை [illegible] இவ்வுத்தரவுப் பிறப்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## புகார்

(மானிப்பாய்)

யாழ் மாநகர சபையால் அறவிடப்பட்டு வந்த எரிபொருட்கள் கட்டணம் கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இருந்து நிறுத்தப்பட்டுள்ள போதும் தொடர்ந்தும் இந்தக் கட்டணத்துக்கான பணத்தை தியேட்டர்களும் மினி தியேட்டர்களும் பொது மக்களிடமிருந்து அறவிடப் பட்டு வருவதாக பொதுமக்களிற் பலர்குறைபாடு தெரிவித்துள்ளனர்.

இவ்வித கட்டணத்துக்காகவே பொதுமக்களிடமிருந்து ரூபா ஒன்று இப்போது கூடுதலாக அறவிடப் பட்டு வருவதாக தெரிகின்றது இவ்விதம் அறவிடப் பட்டுவரும் பணம் யாழ் மாநகர் சபையிடமும் போய்ச் சேர்வதில்லை ஆகையால் இத்தியேட்டர்கள் இதனை வசூலிப்பதை நிறுத்துமாறு வரியிறுப்பாளர் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

## பயிற்சி வகுப்புகள்

(உடுவில்)

செரம்பூர் பல்கலைக்கழக பரீட்சைககுரிய பயிற்சி வகுப்பு விரிவுரைகள் உடுவில் மருதனுமடம் கிறிஸ்வ சேவை ஆசிரமத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

வகுப்புகள் மேற்படி ஆசிரமத்தில் அமைந்துள்ள நற்தூதுப்பணி பயிற்சி நிலையத்தினரால்நடாத்தப்படும். இவ் வகுப்புக்களில் திறமையாக பயிற்சிகளை மேற்கொள்பவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தென்னிந்திய திருச்சபையில் முழுநேர ஊழியர்களாக சேவையாற்ற வாய்ப்பளிக்கப்படும். இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்பவர்களுக்கு சகாயநிதி வழங்கப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

புலன்களின் கவர்ச்சி அறிஞர்களைக் கூடத் தடுமாறச் செய்கிறது.

—வியாசர்

# நமது நோக்கு

### இன்றியமையாத இன்றைய கடமை:

## கம்பன் தமிழ்க்கோட்டம்

இராமாயணத்தை விடியவிடிய பிரசங்கமாகக் கேட்ட ஒருகாலம்யாழ்ப்பாணத்தில் இருந்தது. விடிந்ததும் இராமர் சீதைக்கு என்னமுறை எனக் கேட்டவர்கள் எண்சாண் உடம்புக்கு வயிறே பிரதானமாகக்கொண்டவர்கள்.

இன்று கம்பராமாயணத்திலும் தமிழின் ஏனைய இலங்கு நூல்களிலும் யாழ்ப்பாண மக்களுக்கு நாட்டம் திரும்புவதற்கு அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் ஆற்றிவரும் பணி ஒரு காரணமெனலாம்.

எண்ண வளர்ச்சிக்குரிய நூலறிவே மனிதனை மனிதனுக்குவது என்று பொது மறைகூறுகிறது. நல்லறிவே நாட்டின் உயிரெனக் கருதிய மகாகவி பாரதியார் தமிழ்நாடு தனது கவிச்சக்கரவர்த்தியை உரியமுறையில் பேணவில்லை என்று கவன்ருர்.

தமிழகத்திலேயே கம்பனுக்கு ஒரு கோட்டம் அமையவில்லை என்ற நிலையில், யாழ்ப்பாண நல்லூரில் ஐந்து லட்சம் ரூபாசெலவில் அமையவிருக்கும் இக்கலைக் கோயில் ஒரு மகத்தான சாதனையென்றே கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் பல கழகங்கள்தொடங்குவதும், அவற்றில் சில கலகங்களில் முடிவதும் சாதாரணம். சுமார் இருபது வருடங்களுக்குமேல் பணிபுரியும் அகில இலங்கை கம்பன் கழகம், சிலவேளைகளில் தூங்கியபோதும் தொடர்பான சேவையில் இன்று நிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் உண்டு.

இலங்கைகாண் படலத்தில் கம்பன் இராமனைக் காட்டும் காட்சி இன்று இங்கு வாழும் தமிழ் மக்கள் நேரடி அனுபவத்தில் சுவைத்துப்படிக்க வேண்டிய பகுதி.

பரிவாரங்களுடன் இராமன் மலைமேலேறி நின்று இலங்கையைக் காண்கிருன். அது வடக்கில் கதிரவன் உதித்தது போன்றிருந்தது. எனவே அரக்கர் அழிவுக்கு அதனை ஒரு தீநிமித்தம் ஆக்கினுர் கவிச்சக்கரவர்த்தி. அரக்கர் இருளாகவும் இராமன் அதை அழிக்கும் கதிராகவும் பொருந்துகின்றனர்.

சூரியன் திசைமாறி எழுவது அழிவுக்குறியாகப் பண்டைத்தமிழர் நம்பியிருப்பதைக் காண்கின்றோம்.

போரிட்டதால் அரக்கர் உடலிலிருந்து தெறித்த இரத்தம் இராமனின் கறுத்த உடலைச் சிவப்பாக்கியது.

தனிமைத் துயரால் வருந்தி எப்போது விடியுமென்று எதிர்பார்க்கும் சீதை, 'கதிரோன் வரவே எனை ஆளுடையான் வருமே' எனச் சூரியனையும் இராமனையும் இணைக்கிருர் கம்பர்.

நீண்ட இரவில் எல்லா உயிர்களும் துயில, சீதையைப் பிரிந்ததால் இராமன் கண் உறங்கவில்லை. இரவு இராமனுக்குத் துன்பம் அளிக்கின்றது. எம்மிற் பலரைப்போல் நாடிழந்து, அரசிழந்து. தந்தையும் இழந்து தமரைப் பிரிந்து இச் சமயம் மனைவியையும் பறிகொடுத்து நிற்கும் அவனுக்கு இரவு பகையாகின்றது.

சீதையைத் தேடும் அப்போதைய செயலுக்குத் தடையாகும் இரவு, என்று விடியுமென நோக்கியிருந்தவனை கவியரசர், சைவ சித்தாந்த நுட்பக் கருத்தில் வைத்து விளக்குகின்ருர்.

மெய்யறிவுசேரும் போது மாயையும் பற்றும்நீங்குவது போல், விடிந்ததும் துயர் நீங்கிச் சூரியனுடன் எழுந்து காரியத்தில் முனைகின்ருன் இராமபிரான் என்கின்ருர் கம்பர்.

இவை போன்ற ஆழமான உணர்வுகளைக் கொண்ட காப்பியத்தை இலங்கை வாழ் தமிழ்மக்கள் இன்று படிக்கத் தவறின், வேறென்று படிப்பது?

தீமையை ஒழித்து உள்ளும் புறமும் ஒளிமய மிளிரும் படி செய்யும் ஆற்றல் உடையவன் இறைவன் ஒருவனே. இருளில் மிதக்கும் உலகை நிமிர்த்த வல்ல பேரொளியை இராமனில் காணும் பாக்கியம்; கம்பன் அளிக்கும் பெருங் கொடை.

இராமாயணத்தை நன்றே படிக்கும் காலம் திரும்பி வந்திருக்கிறது. அதனை இன்றே படிக்கவும், அதன் நலனைச் சுவைக்கவும் யாழ்ப்பாண நல்லூரில் அமையவிருக்கும் கம்பன் தமிழ்க்கோட்டம் உதவ வேண்டுமென வாழ்த்துகின்ரேம்.

ஆங்கில இலக்கிய மென்ருல் உடனே ஷேக்ஸ்பியரை நினைக்கும் ஆங்கிலேயரைப் போல், தமிழ் இலக்கியம் என்ருல் கல்வியிற் பெரியவனுகிய கம்பனை நினைக்கும் வகையில் இக்கோட்டம் அமைய வேண்டும்.

## கையொப்ப இயக்கம்

(சுண்டுக்குளி)

பத்து லட்சம் கையொப்பம் வாங்கும் நடவடிக்கைகளில் நவாலி பிரஜைகள் குழுவினரும் அப்பகுதி மக்களிடம் வீடு வீடாகச் சென்றுகையெழுத்து வாங்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

இப் பணியை பிரஜைகள் குழு அங்கத்தவராகிய திரு க. மார்க்கண்டு மேற்கொண்டுள்ளார்.

### வடபகுதியில் பரவிவரும் விசர்நாய் கடித்தொல்லை

# பொதுமக்கள் அறியவேண்டிய முக்கிய விபரங்கள்

(விசர் நாய்கடி - அல்லது நீர் வெறுப்பு நோய் வடபகுதயில் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் இந்நோயின் தாக்கத்திலிருந்து தப்பிக்கொள்வதற்கான வழி வகைகளை அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும். அந்த நோக்கில் யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எஸ். சிறிகரன் எழுதியுள்ள விளக்கக் கட்டுரையை இங்கு தருகிறேம்)

(-ஆ-ர்)

யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் கடைசி 4 மாதங்களாக நீர் வெறுப்பு நோய் (விசர்நாய்க்கடி) மக்களிடையே கூடுதலாக இருக்கக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. கடைசி நான்கு மாதங்களுக்குள் இந்த நோயினுற் பாதிக்கப்பட்ட 7 பேர் யாழ். அரசாங்க வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டு இறந்து விட்டார்கள். இத்தகவல் மேலும் யாழ்ப்பாணத்தில் நீர் வெறுப்பு நோய் கூடுதலாக உண்டாகும் அபாயம் உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது இதனுல் நீர் வெறுப்பு நோய் என்ருல் என்ன? என்பதைப் பொது மக்களாகிய நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது ஏனெனில் இது யாருக்கும் சம்பவிக்கலாம்.

**--டாக்டர் எஸ். சிறிகரன்--**

இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்னர் பலவித நோய்கள் உண்டாகி மனிதரின் உயிர்களைப் பறித்தன. இவற்றுள் நீர்வெறுப்புநோய், ஏற்புவலி அல்லது (Tetanus), டீப்தீரியா, காசரோகம், மலேரியா என்பன அடங்கும். அண்மையில் விஞ்ஞான ரீதியாக இவற்றைத் தடுக்கும் வழிகளிற் கண்ட முன்னேற்றம் காரணமாக இந்த நோய்களினுற் பாதிக்கப்படுவோர் சிறிய அளவாகக் குறைக்கப்பட்டுள்ளனர். எனினும் நீர் வெறுப்பு நோய் திரும்பத் தலையெடுப்பதற்குக் காரணம் நாம் இது சம்பந்தமாக தடுப்பு முறைகளை சரியாகத் தெரிந்து கொள்ளாமையே ஆகும். மேலும் நீர் வெறுப்புநோய் மற்றைய மேற்கூறப்பட்ட நோய்களைவிடக் கொடியது, ஏனெனில் இந்த நோய் ஒருவரைப் பாதித்தால் நிச்சயம் அவரை இறக்கச் செய்துவிடும். சுருக்கமாகக் கூறினுல் நீர் வெறுப்பு நோய் உண்டாகினுல் அதற்கு மருந்து இல்லை என்பதையும் அதனிலிருந்து எம்மைக்காக்க ஒரேயொரு வழி நம்மிடம் அந்நோய் வராது தடுப்பது மாத்திரமே என்பதைநாம்ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் வேண்டும்.

நீர் வெறுப்பு நோய் எனப்படுவது (Rhabdovirus) ராப்டோவைரசு என்னும் கிருமியினுல் உண்டாகிறது. இக்கிருமி மனிதனை மாத்திரமல்ல நாய், பூனை போன்ற விலங்குகளையும் பாதித்து அவற்றில் நோயை உண்டாக்கும். இக்கிருமியானது, இக்கிருமியாற் பாதிக்கப்பட்டுள்ள நாய்களின் உமிழ்நீர் அல்லது எச்சியிற் காணப்படுகின்றது. இக்கிருமியினுற் பாதிக்கப்பட்ட நாய்கள் மனிதனைக் கடிப்பதன் மூலம் அல்லது நகங்களால் விறாண்டுவதன்மூலம் அல்லது எற்கனவே உடலிலுள்ளபுண்ணை நக்குவதன் மூலம்கிருமியானது நாயிலிருந்து மனிதனின் இரத்தத்தை அடைகிறது. கிருமியானது மனித இரத்தத்தை அடைந்து அல்லது நோயுள்ள நாய் கடித்து 10 நாட்களிலிருந்து 6 மாதங்களினுள் மனிதனின் மூளையை அடைந்து அங்குள்ள நரம்புகளைச் சிதைப்பதனுல் மனிதனில் நீர்வெறுப்பு நோய் தென்படுகிறது.

மனிதனில் நீர் வெறுப்பு நோய் தோன்றியதன் அறிகுறிகளாவன;-

ஆரம்பத்தில் காய்ச்சல் உண்டாகும் சில மணித்தியாலங்களின் பின்னர் நோயாளி நீரைக்குடிக்க முயற்சிக்கும் பொழுது தொண்டையிலுள்ள சதை இறுகுவதால் குடிக்கமுடியாது கஷ்டப்படுவார். தொடர்ந்தும் நோயாளிக்கு தண்ணீர்த்தாகம் எடுப்பதால் நீரைக்குடிக்க விருப்பப்படுவர். ஆனுல் நீரைஅருந்த முற்படும் பொழுது தொண்டை இறுகுவதை அவனித்ததனுல், அதனுலுண்டான பயத்தால் நீரை அருந்தமாட்டார். இந்நிலை தொடர்ந்து சில நாட்கள் நீடித்து பின்னர் மயக்க நிலையை அடைந்து அதன் பின்னர் ஓரிரு தினங்களில் மரணம் சம்பவிக்கும்.

மேற்கூறப்பட்ட நோய்க் கிருமியானது நாயைப் பாதிப்பதனுல் நாயில் உண்டாகும் அறிகுறிகளை இனிப்பார்ப்போம். இக்கிருமியினுற் பாதிக்கப்பட்ட நாய்கள் இரண்டு விதங்களில் தனதுநோய் அறிகுறிகளை வெளிக்காட்டலாம்.

### முதலாவது விதம்

வழமையைவிட வித்தியாசமாக எல்லா இடங்களிலும் நோக்கமில்லாது ஓடித்திரிதல்.

தனக்கு ஒன்றும் தீங்கு செய்யாது இருக்கும் பிராணிகளை அல்லது மனிதனை தானுகவந்து கடித்தல் அல்லது தாக்கல்

வாயிற் கூடுதலான எச்சில் வடிதல்.

வழமைக்கு மாருன முறையில் குரைத்தல்.

கண் கூடுதலாக சிவந்து இருத்தல்.

சாப்பிடாது இருத்தல்.

### இரண்டாவது வகை:

நாயின் முகபாவனை எப்பொழுதும் வாயினுள் ஏதோ ஒன்றை வைத்துக்கொண்டு விழுங்காது வைத்திருப்பது போற் தோன்றும். அத்துடன் ஒரு இடத்தில் முடங்கிக் கிடக்கும் நீர் வெறுப்பு நோய்க் கிருமியானது அதனுற் பாதிக்கப்பட்ட நாயின் எச்சியிலிருந்து வெளிப்படத் தொடங்கி 10 நாட்களுக்குள் அந்நாய் இறந்து விடும்.

மேற்கூறிய விபரங்களையடுத்து அதன் அறிவையும் பயன்படுத்தி நாம் எவ்வாறு நீர் வெறுப்பு நோய் மனிதனில் உண்டாவதைத் தடுக்கலாம் எனப் பார்ப்போம்.

(அ) வீட்டில் வளர்க்கப்படும் நாய்கள் பூனைகளை ஒரு அரசாங்க மிருக வைத்தியரிடம் காட்டி ஒழுங்காக அவர் கூறியபடி விசர் நாய்க்கடி கிருமிக்கெதிரான தடுப்பூசி போட வேண்டும். அத்துடன் ஊசி போட்டதன் அடையாளமாகஒருபட்டியை மிருகத்தின் கழுத்தைச் சுற்றிப் போட வேண்டும். அத்துடன் நாய் வெளியிற் சென்று மற்றைய வளர்ப்போரில்லாது செல்லும் மிருகங்களை அணுக விடாது இதனை உங்கள் காணி எல்லையினுள்ளேயே நிற்க விடுங்கள்,

[ஆ] வளர்ப்போர் இல்லாது திரியும் நாய்களைக் கொன்று அவற்றின் உடலை முற்ருக எரித்து சாம்பராக்க வேண்டும்.

[இ] உங்கள் வீட்டு வளர்ப்பு நாய்களில் மேற்கூறப்பட்டபடி நோயினுற் பாதிக்கப்பட்ட அறிகுறிகள் ஏதாவது காணப்படின் அதனை உடனே தனிப்படுததி மற்றைய மிருகங்களிடமிருந்து ஒதுக்கி அதனை அரசாங்க மிருக வைத்தியரிடம் ஒப்படைக்கவும். அல்லது அதனைக் கொன்று அதன் தலையை மாத்திரம் எடுத்து யாழ். அரசினர் வைத்தியசாலை அல்லது அரசாங்க மிருக வைத்தியரிடம் ஒப்படைக்கவும். மிகுதி உடலை எரித்து விடவும்.

[ஈ] கிருமியினுற் பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நாய்கள் தாக்கி ஏதும் காயம் எமக்கு உண்டானுல் ''என்ன செய்ய வேண்டும்?'' எனத் தெரிந்திருப்பது அவசியம்.

### முதலாவதாக முதலுதவி

காயத்திற்கு அல்லது நக்கப்பட்ட புண்ணிற்கு சவர்க்காரம் போட்டு நன்ருகத் தேய்த்துக் கழுவவும். இது மிகச்சீக்கிரமாகச் செய்யப்பட வேண்டும். [உடனே] 3 தடவை மேற்கூறியதைத் தொடர்ந்து செய்யவும். அதன் பின்னர் புண்ணிற்கு ஸ்பிரிட் [surgical spirit] அல்லது அயடின் கலவை கொண்டு பூசிவிடவும்.

மேற்கூறியதை அரசாங்க ஆஸ்பத்திரியிலும் செய்து கொள்ளலாம்.

### இரண்டாவதாக

அரசாங்க வைத்தியசாலைக்கு நோயாளியை எடுத்துச் சென்று விபரத்தைக் கூறவும் தாக்கிய நாயில் விசர்நாய்க் கடிக் கிருயினுற் தாக்கப்பட்ட அறிகுறிகள் காணப்பட்டிருப்பின்,

உடனே புண்ணிற்குள்ளும் புண்ணைச்சுற்றியும் தடுப்பூசி ஏற்றுவார்கள். இதன் பின்னர் தினமும் ஒரு தடவைப்படி 14 நாட்களுக்கு இன்னெரு வித தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.

இதன் பின்னர் 10 நாட்கள், 20 நாட்கள், 90 நாட்களின் பின் ஒவ்வொரு தடுப்பூசி போட்டால் நீர் வெறுப்பு நோய்க்கெதிரான சக்தி உடலிற் பேணப்பட உதவியாக இருக்கும்.

### மூன்ருவதாக

நோய் அறிகுறி காணப்படாத எந்த நாய் கடித்தாலும் அதனைக் கட்டிவைத்து 10 நாட்களுக்கு அவதானிக்கவேண்டும். இந்தப் பத்து நாட்களுக்குள் நாய் இறந்திருப்பின் உடனே அரசாங்க வைத்தியசாலைக்குச் சென்று மேற்கூறப்பட்ட தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ளவேண்டும்.

மேற்கூறிய தடுப்பு முறைகளை நாம் ஒவ்வொருவரும் தெரிந்துவைத்து அதன்படி நடவடிக்கை எடுப்போமாயின் நீர் வெறுப்பு நோய் மனிதரில் உண்டாவதை நாம் முற்ருக தடுப்பதன்மூலம் அனுவசியமான உயிரிழப்புகளைத் தடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் பிரதேச வெகுஜன கூட்டுக் குழுவின் பத்து மைல் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

[உடுவில்]

''தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் எடுத்துவரும் இராணுவ நடவடிக்கைகளால் முதியோர், பெண்கள் மாணவர், இளைஞர் பச்சிளங் குழந்தைகள் என்ற வேறுபாடின்றி உயிர் உடமைகளை இழந்து வருகிறார்கள். தாக்குதல்களை நிறுத்தி, 1000 மீற்றர் பாதுகாப்பு வலயச்சட்டத்தை வாபஸ் பெற்று, தமிழ் மக்களை சகல அழிவிலிருந்தும் காப்பாற்றி உதவ மாறும மனிப்பாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள சகல வெகுஜன அமைப்புக்களின் சார்பிலும் கேட்டுக் கொள்கின்றோம்.''

மானிப்பாய் விழிப்பு மன்றத்தினரின் ஆதரவில் நேற்று நடாத்தப்பட்ட மானிப்பாய் பிரதேச வெகுஜன கூட்டுக் குழுவினரின் ஆர்பாட்ட ஊர்வல முடிவில், மேற்கண்ட கோரிக்கைகள் அடங்கிய அறிக்கை சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதனிடம் கையளிக்கப்பட்டது.

மானிப்பாய், உடுவில், சுதுமலை, சண்டிலிப்பாய், ஆனைக் கோட்டை, நவாலி ஆகிய இடங்களில் உள்ள விழிப்பு மன்றங்களும் மக்கள்குழு, பிரசைகள் குழு, மற்றும் பொது ஸ்தாபனங்களைச்சேர்ந்தோரும் ஒன்றிணைந்து இவ்வூர்வலத்தை நடத்தினர்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் முன்பாக இருந்து ஆரம்பிக்கப்பட்ட இவ்வூர்வலம் ஆனைக்கோட்டைச்சந்திவரை சென்று பின்னர் நவாலி அரசடிச் சந்தியை அடைந்து நவாலி வடக்குவீதி ஊடாகச் சண்டிலிப்பாயைச் சென்றடைந்தது.

சுமார் பத்து மைல்களுக்கு மேல் நடைபெற்ற இந்தஊர்வலத்தில் ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

கொதிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல், பாடசாலை மாணவர்கள், பெண்கள் முதியோர் உட்பட ஊர்வலத்தில் பலர்கலந்துகொண்டனர். சுமார் இரண்டுமைல் நீளமானதாக ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது.

அரசாங்கத்தின் விமானத் தாக்குதல், இராணுவக் கெடுபிடிகள், 1000 மீற்றர் வலையச் சட்டம் ஆகியவற்றை எதிர்த்து கிராமம் கிராமமாக நடத்தப்பட்டு வரும் மக்கள் போராட்டத்தின் ஒரு கட்டமாக இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

மானிப்பாய்ப் பிரதேசவெகுஜனக் கூட்டுக் குழுவின் சார்பில் திரு. அ. வல்லிபுரம் மகஜர் ஒன்றை சண்டிலிப்பாய் அரசாங்க அதிபரிடம் கையளித்து அரசி ஜனாதிபதிக்கும், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. கே சண்முகநாதன் மேற்படி அறிக்கையை பெற்றுக்கொண்டு உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

''தமிழ் மக்களின் இந்த உணர்ச்சிகளை நேரில் பார்க்க வேண்டியவர்கள் இங்குஇல்லாதிருப்பது வேதனையைத் தருகின்றது. எல்லாப்பிரதேச மக்களும் ஒன்றிணைந்து போராடும் சகல நகழ்ச்சிகளிலும் நானும், எனது ஊழியர்களும் நிச்சயமாக ஒத்துழைப்பு வழங்குவோம். நீங்கள் ஒப்படைத்த இந்த அறிக்கையை சம்பந்தப்பட்டவர்களுக்கு உடனடியாக அனுப்பிவைப்பேன் என்று உறுதியளிக்கின்றேன்''

மானிப்பாய்ப் பிரதேசத்திலுள்ள முப்பத்திரண்டு மசகள் அமைப்புக்கள் இவ்வூர்வலத்தில் கலந்துகொண்டன

ஊர்வலம் சென்ற பாதைகளில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன தொழிற்சாலைகள், வேலைநிலையங்களில் எந்த வேலைகளும் நடைபெறவில்லை.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களுக்கு ஆங்காங்கே பல இடங்களில் பொதுமக்கள் தாகசாந்தி வழங்கி ஊர்வலத்தினரை உற்சாகப்படுத்தினர்.

## யாருடையது?

யாழ். தொலைபேசி அலுவலகத்தைச் சேர்ந்த திரு. பொ. தில்லைநாதன் ஒரு மூக்குக் கண்ணாடியையும், நல்லூரைச் சேர்ந்த திரு. கே. யோகநாதன் ஒரு திறப்புக் கோர்வையையும் கண்டுஎடுத்து 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## கனகரத்தினம் ம.ம. வித்தியாலய ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம்மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், கூட்டமும் மேற்படி சங்கத் தலைவர் டாக்டர் மோகனதாஸ் தலைமையில் நாளைக்காலை நடைபெறும்

கல்விப்பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகச் கலந்துகொள்வார். இவ்வைபவத்தில் இக்கல்லூரியில் நீண்ட காலம் சேவையாற்றிய பதினைந்து முதுபெரும் ஆசிரியர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள்.

மதியபோசனத்தைத்தொடர்ந்து பழையமாணவர்கள், இக்கல்லூரி மாணவர்கள் பங்குபற்றும்பலவித விளையாட்டுப்போட்டிக்களும் நடைபெறும். [ஐ]


கடைசிநேர
வரிவிளம்பரம்

**வகுப்புகள்**

A. L. 1986, 87 பொருளியல் வகுப்புகளும், மீட்டலும் ஆரம்பமாகிவிட்டன. ஆசிரியர் திரு. கே. ரஞ்சித் B. A. (Hons) சனி, ஞாயிறு காலை 9-11 மணி வரை. செல்க்கா இன்ஸ்ரிரியூட், டச் வீதி, சாவகச்சேரி. (C 648)

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
சிவாஜி—வாணிஸ்ரீ
புண்ணிய பூமி

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
கார்த்திக்—ராதா
நடித்த
அலைகள் ஓய்வதில்லை

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
சிவாஜி— கே. ஆர். விஜயா
நடித்த
நெஞ்சிருக்கும் வரை


## ரூபவாஹினி

மாலை
5-00 செய்திகள்
5-05 உள்ளூர் உதைபந்தாட்டம்
5-30 உலக விளையாட்டரங்கு
6-30 செய்திகள் (தமிழ்)
7-00 மனிதக்குரங்குகளின் உலகம்
8-00 செய்திகள் [சிங்களம்]
8-25 'யசோரவய' டெலி நாடகம்
9-00 செய்திகள்(ஆங்கிலம்)
9-25 'டேட்லைன்'
9-50 'மக்லயின்ஸ்லோ' (துப்பறியும் தொடர்)
10-40 ஒளிபரப்பு முடிவு

## நாளை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு வலயப் பிரகடனத்தாலும், கனரக ஆயுதங்களைப் பாவிப்பதாலும் கிராமங்களில் வாழும் உழைப்பாளமக்களும், வறிய கூலி விவசாயமக்களும் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றிய கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் கலாஜோதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை, கிராமிய உழைப்பாளர் சங்கம்நடத்துகின்றது. இதன்போது கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் பல்வேறு கிளைகளிலிருந்தும் உறுப்பினர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொள்வார்கள். (ஐ)

## இந்தியாவிடம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

''தீவிரவாதிகளின் நிலைப்பாடு பற்றி எமக்கு எதுவும் தெரியாது. ஏனெனில் எமக்கும் அவர்களுக்குடையே எதுவித தொடர்பும் இல்லை ஆனால் இந்திய அரசுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நேரடித் தொடர்பு இருக்கிறது. இந்நிலையில் அவர்களை நல்வழிப்படுத்துவதில் இந்திய அரசு எம்மைவிடக்கூடுதலான பாத்திரம் வகிக்க முடியும்'' என்று அமைச்சர் கூறினார்.

**பேச்சுவார்த்தை விபரங்கள்**

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண இதுவரை காலமும் இலங்கை அரசு நடாத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்களை வெளியிட மறுத்த அமைச்சர்; ஒரு ஒற்றையாட்சிக் கட்டுக்கோப்பினுள்ளேயே அதிகாரத்தைப்பரவல் படுத்த முடியும் என்றும்; தமிழர் விடுதலைக்கூட்டணி முன்வைக்கின்ற சமஷ்டி ஆலோசனைகளை உலகில் எங்கும் காணாத புதுமையானதும் விசித்திரமானதுமான நியாயமற்றதுமான ஒன்றாக இருப்பதாயும் கூறினார்.

வடக்கையும் கிழக்கையும் இணைப்பதில்லை என்பது அரசின் தெட்டத்தெளிவான முடிவாகும் என்றும் வடகிழக்கு இணைப்புக்கோரிக்கைகைவிடப் படும்பட்சத்தில் இனப்பிரச்னைக்கு விரைவில் ஒரு அரசியல் தீர்வு காணும் சாத்தியம் ஏற்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தைப் பிரிப்பது பற்றிய விவகாரம் குறித்த கேள்வியொன்றுக்கு அமைச்சர் பதிலளிக்கையில்; ''இரு புறத்திலும் முஸ்லிம்கள் வாழுகிறார்கள். எனவே இம் மாவட்டத்தைப் பிரிப்பது முஸ்லிம்களைப் பிரிப்பதற்குச் சமமாகும்'' என்று தெரிவித்தார்.

''அரசாங்கம் ஒரு பெரும் தாக்குதலுக்கு ஆயத்தமாகி வருகின்றது என்ற கதையைத் தீவிரவாதிகள் அவ்வப்போது கூறிவருகிறார்கள். ஆனால்எதிர்காலத்தில்அவர்களிடமிருந்தே நாம் ஒரு பெரியதாக்குதலை எதிர்பார்க்கின்றோம். இதனைத் தான் வட, கிழக்கிலுள்ள கடல் கண்காணிப்பு வலயத்தை விரிவுபடுத்தவு புதிய இராணுவ சடற்படை தளவாடங்களைக் கொள்வனவு செய்யவும் முடிவுசெய்துள்ளோம். எமது இராணுவ வலு நாள்தோறும், நிமிஷப் தோறும் மேலும் மேலுப் வலுப்பெற்று வருகின்றது'' என்றும் அமைச்சர் அத்துலத் முதலி கூறினார்.

தமிழ்த் தீவிரவாதிகளுடனுள்ள தொடர்புக்காக இருபத்தொன்பது சிங்கள இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தகவலையும் அமைச்சர் வெளியிட்டார்.

## ரொமேஷ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பத்திரிகை கூறுகிறது.

''தமிழர்விடுதலைக்கூட்டணி சமர்ப்பித்த ஆலோசனைகளை இலங்கைஅரசு அணுகியவிதம் இந்திய அரசுக்கு ஏற்படுத்தியுள்ள அதிருப்தியும், சந்தேகமும் நீக்கப்படாத பட்சத்தில் திரு பண்டாரியின் இலங்கை விஜயம் சாத்தியமாகாது இலங்கையிலுள்ள இந்திய தூதுவர் திரு டிக்ஸிற் இலங்கை அரசின் பிரதிநிதிகளுடன் நாள்தோறும் தொடந்து பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகிறார்'' என்று 'இந்து' மேலும் எழுதுகிறது.

இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியின் மூன்றுநாள் மாலைதீவு விஜயத்தின் பின்னர் கூட திரு. பண்டாரி இலங்கைக்கு விஜயஞ் செய்வதற்கான அறிகுறிகள் இருப்பதாகவும் தெரியவில்லை'' என்றும் 'இந்து' எழுதுகிறது.

## இன்று

[வண்ணார்பண்ணை]

வட்டுக்கோட்டை கல்விவட்டாரத்தையுள்ளடக்கிய காரைநகர் கல்லூரி மாணவர்களுக்கான பொதுஅறிவு, ஆங்கில பேச்சுப் போட்டி ஆகியன இன்று சனிக்கிழமை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெறுகிறது.

காரைநகர் திருச்சபை போதசர் வண. ஏ. ஜெயகுமாரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கான ஏற்பாடுகளை காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை செய்துள்ளது.

0 0 0

[உடுவில்]

உடுவில் கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் ஒன்று சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இன்று பிற்பகல் 3மணியளவில் நடைபெறவுள்ளது முன்னாள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. பொ சகுமாரசாமி பிரதம பேச்சாளராக கலந்துகொள்வார்.

## தொண்டமானாறு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் ரொக்கட் லோஞ்சரால் தாக்குதல் நடாத்திய பொழுது ஐந்துபேர் பலியானார்கள், மற்றவர்கள் காயமுற்றார்கள். வாகனமும் சேதமடைந்தது'' என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## பாதுகாப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றைய மாநாட்டில் அமைச்சர் அத்துலத் முதலியிடம் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

யாழ். குடாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தால் எழுந்துள்ள நெருக்கடிகளைச் சுட்டிக்காட்டி' ''அவ்வலயத்தை அகற்றுவது சாத்தியமில்லையா?'' என்று 'ஈழநாடு' நிருபர் கேட்ட இன்னொரு கேள்விக்கு அதமச்சர் பின்வருமாறு பதிலளித்தார்.

''இந்த ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தைப் பேணுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. பொது மக்கள் தேவையின்றிப் பாதிப்புக்குள்ளாகும் சாத்தியம் பற்றி மக்களுக்கு இவ்வலயம் எச்சரிக்கிறது. தீவிரவாதிகள் தாக்கும் போது நாமும் பதிலுக்குத் தாக்குகின்றோம். இவ்வலயம் இவ்வாறான பரஸ்பர தாக்குதல்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளிலிருந்து மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. இவ்வலயத்தைத் தவிர வேறு ஏதாவது மாற்று வழி இருந்தால் சொல்லுங்கள்: நான் பரிசீலனை செய்யத் தயாராகவுள்ளேன்'' என்றார்.

## காரைநகர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பேருக்கு மேல் காயம்அடைந்தனர். இவர்களில் சிலர் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையிலும், பலர் யாழ் அரசினர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் மேலும் சிலர் இறந்திருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறைப் பட்டினத்தில் உள்ள பல வீடுகளின் கூரைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒருவீடு முற்றாக எரிந்துள்ளது.

வாகனப் போக்கு வரத்துக்கள் உட்பட காரைநகர், ஊர்காவற்றுறைக்கிடையில் நடைபெற்றுவந்த படகுச் சேவைகளும் துண்டிக்கப்பட்டுவிட்டன.

ஹெலிகொப்ட்டர்விமானங்களும் தாழப்பறந்து வேவு பார்ப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன.

இக்குண்டுத் தாக்குதலால் புனித அந்தோனியார் கல்லூரிக்கு முன்பாகவுள்ள புனித அந்தோனியார் ஆலயமும் பலத்த சேதமடைந்துள்ளது.

இப்பகுதிகளிலுள்ள மக்கள் பீதியினால் பாதுகாப்புத்தேடி அயல்கிராமங்களுக்கு சென்றுகொண்டிருக்கின்றனர்.

## யாழ். ஆஸ்பத் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

கடந்த 6-ம் திகதி இரவு வெளிநோயாளர் பகுதியில் கடமையிலீடுபட்டிருந்தபெண் வைத்தியர் அதூறான சகாத வார்த்தைகளால் பேசப்பட்டும் அச்சுறுத்தப்பட்டுமுள்ளார். வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளர் கூட இவர்களது பலவந்தத்துக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை பற்றி பரிசீலனை செய்வதற்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஊழியர்கள் கூடி ஆராயவுள்ளார்கள். இவ்வேதனையை நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று ஆஸ்பத்திரி வட்டாரம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்- தை
திகதி- 26 (8 - 2 - 1986)
கிழமை- சனி
திதி- சதுர்த்தி
காலை 8-23ன் மேல் அமாவாசை
நக்ஷத்திரம்- திருவோணம் பின் இரவு வரை

மேடம்- பந்த பாசம் உங்களைப்பரவசப்படுத்தும். உறவினர் உற்சாகமாக வரவேற்பர். பெண்களின் மூலமான உதவியுமுண்டு.

இடபம்: கொள்கையில் அதிகப்பற்றுதல் ஏற்படும் இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள். பிள்ளைகளின் செல்வாக்கும் வளரும்.

மிதுனம்: மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளமிடுவர் மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும்.

கடகம்: களஸ்திரவழியால் நன்மைகள் வந்து சேரும். குடும்பத்தில் தென்றல் வீசும். செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும்.

சிங்கம்; புதிய தலையிடி தலைதூக்கும். வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும். மாணவர்கள் கவனம் வேண்டும்.

கன்னி: உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும். தெய்வ வழிபாட்டிலும் ஆர்வம் ஏற்படும்.

துலாம்: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும். உற்சாகமாகக்கடமையாற்றுவீர்கள். உவகையும் சேரும்.

விருச்சிகம்: பொருள் வரவுண்டு மேலிடத்து ஆதரவுமுண்டு. தித்திக்கும் செய்தியுடன் தேனூன வாழ்வுப் உண்டு.

தனுசு: உறவு முறையில் வெடிப்புத் தோன்றும் பண விவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம். தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

மகரம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும். நிதானம் வேண்டும்.

கும்பம்: பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும் வரவுக்கும் இடமுண்டு குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிலவும்.

மீனம்: எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும். சுகாதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. அமைதி வேண்டும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## 'அமிர்' நிலைமை அறிந்தார்

(கொழும்பு)

சுன்னாகம், பருத்தித்துறை, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களைப்பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ அமிர்தலிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வத்துடன் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு அறிந்துகொண்டார்.

## உலக பண்பாட்டுக் கழகக்கூட்டம்

(வேலணை)

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணியளவில் இயக்கத் தலைவர் திரு. பொன், பூலோகசிங்கம் தலைமையில் யாழ் நகரில் நடைபெற விருக்கிறது இக்கூட்டத்தில் உலகத்தமிழ் பண்பாடு இயக்கத்தின் தாய் சங்கத்தைச் சேர்ந்த திரு ச. செந்தூர்ராசா, திரு. ஆ. சண்முகலிங்கம் திரு. இ. சற்குருநாதன் ஆகியோர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றவுள்ளார்கள் அன்றையதினம் இலங்கைக் கிளைக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.

## அமைச்சின் மேலதிகச் செயலாளர்

(வண்ணார்பண்ணை)

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளராக திரு எம். எம் குலநாயகம் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

நீண்டகாலம் யாழ்.மாவட்டக் காணி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு குலநாயகம் ஸ்ரீலங்கா நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியெய்தி யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பணியாற்றினர். இதன் பின் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மூப்பு உதவிச்செயலாளராகப் பணியாற்றி இதே அமைச்சின் மேலதிகச்செயலாளராக மீண்டும் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

## பருவகாலச் சீட்டுவழங்குவர்

(வேலணை)

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்துறைவரை சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் போக்குவரத்து சேவை சங்கத்தினர் பருவகால சீட்டுக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இத்திட்டத்தின் பிரகாரம் இம்மாதம் முதல் பருவகால சீட்டுக்கள் மாணவருக்கு வழங்கப்பட்டுவருவதாகவும் இதுவரை பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் மேற்படி சங்க தலைமைக்காரியலத்திற்கு சென்று விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து எதிர்வரும் 10ம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## பேச்சுப் போட்டிகள்

(வண்ணார்பண்ணை)

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரப் பிரிவைச் சேர்ந்த காரைநகர்ப் பகுதி மாணவர்களுக்கிடையேயான பொதுஅறிவுப் போட்டி, ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள் சனிக்கிழமை காரைநகர் யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகின்றன.

யாழ் நவீனசந்தை பாட்டா நிறுவன ஆதரவுடன் காரைநகர் வாரி வளவு நல்லியக்கசபை இப்போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்கவுள்ளது


## விற்பனைக்கு

சிறிது பழுதடைந்த நியூஸ் பிறின்ட் தாள்கள் விற்பனைக்குண்டு. காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

**நிர்வாகி,**
ஈழநாடு,
யாழ்ப்பாணம்.

[A210]

## மகேஸ்வரி இல்லம்
### நவாலி, மானிப்பாய்

மேற்படி இல்லத்தில் 5-15 வயதுக்குட்பட்ட பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையும் இழந்த ஆதரவற்ற பிள்ளைகளை சேர்ப்பதற்கு வெற்றிடங்கள் உள்ளன. அத்துடன் சமையல்செய்து பிள்ளைகளைப் பராமரிப்பதற்கும் ஆள் தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும்.

**தர்மகர்த்தா சபை**

(C628)

## உருக்கமானவேண்டுகோள்

எனது பாவிப்பிலுள்ள 81 ஸ்ரீ 799 (நீல நிறமுடைய) கொண்டா மோட்டார் சைக்கில் (185) கடந்த 3ந் திகதி இரவு நாவலர் வீதி, 639/1 இலக்கமுடைய எனது சகோதரர் வீட்டிற்கு முன்னல் நிறுத்திவிட்டு வீட்டினுள் சென்று அரைமணிநேரம் கழித்து வந்து பார்த்தபோது சைக்கில் காணமற்போய்விட்டது. இதனல் எனது கடமைகள் செயய இயலாமல் இருக்கின்றது. எனவே புனிதமான இயக்கங்கள் இந்த மோட்டார் சைக்கிலை மீட்டுத் தருமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

**ச. உலகநாதன்**

219/6, நாவலர் வீதி,
(கடையிற்சாமி லேன்),
யாழ்ப்பாணம்.

(C623)

## வார இறுதி வகுப்பு

PHARMACIST [External] EXAMINATION 86/87,
[Ceylon Medical College Council Registration]

**எதிர்வரும் 23-02-1986 ஆரம்பமாக உள்ளது**

Dr. SIVAGNANAPANDITHAN
(Chief Lecturer in Pharmacist College, Colombo)
Mrs. V M. KUHANANDA
(Chief Pharmacist, General Hospital, Colombo)
Mr S. SIV KUMAR
(Lecturer in Pharmacist College, Colombo)

ஆகியோர்களால் விரிவுரைகள் நடாத்தப்படும். செய்முறைகள் சகல வசதிகளையும் கொண்டுள்ளது. 15-02-1986க்கு முன் நேரில்வந்து தவணைக்கட்டணம் 400/-ம், அனுமதிக்கட்டணம் 100/-ம் செலுத்தி பதிவுசெய்துகொள்ளவும்.

**அதிபர்,**
உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

[C 602]

## Spoken English & Book-keeping & Accounts (London Exams.)

தபால் மூலமும் நேரிலும்

## English Short-hand and Typewriting (London Exam.)

நேரிலும் பயிற்றப்படும்.

## IMPERIAL INSTITUTES,

DISPENSARY LANE, MAIN STREET,
ILAVALAI.

(C 621)

இலங்கையில் முதல் முதலாக

## தேசிக்காய் வாசனையுடன்




## எம்டீ சோப்




ரூபா 2/-




ரூபா 12/50

இதே விலையில் இதைவிட சிக்கனமானதும் சிறந்ததுமான வேறொரு சவர்க்காரம் வாங்க முடியுமா...... இன்றே வாங்குங்கள்

# புதிய எம்டீ சோப்

இனும்:
(1) ஒவ்வொரு புதிய பார் சோப்புடனும் ஓர் பொக்கற் கலண்டர்.
(2) 5 எம்டீ சோப் மேலுறைகளுக்கு ஓர் பொக்கற் கலண்டர்.
(3) 30 எம்டீ சோப் அல்லது 5 பார்சோப் உறைகளுக்கு ஓர் அப்பியாசக் கொப்பி.


**14, 16, கைத்தொழிற்பேட்டை — அச்சுவேலி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் முகாந்திரம் முத்துக்குமாரு அம்பலவாணர்**

(பரிஸ்டர், பிறப்பிடம் காரைநகர்)



மலர்வு: 08-01-1919
உதிர்வு: 08 02-1985
திதி: 28-01-1986

பூத உடல் மறைந்தாலும் உங்கள் புகழ் உடல் மறையவில்லை

எங்கள் அன்புக்களஞ்சியமே! நீங்கள் எங்களை விட்டுமறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு பல்லாண்டுகள் எம்மனதில் நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
அன்பு மகள்.

'சற்குருவாசம்'
திருநெல்வேலி. C-614

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பலாலி வீதி, 93ம் இலக்கத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற வீரசிங்கம் உத்தமசிங்கம் பெண் சரோஜினிதேவியின் மரணசாதனமற்ற மரணச் சொத்தின் விடயத்தில்.

— மனுதார்,

மூ. இல. ரி/3943
வீரசிங்கம் உத்தமசிங்கம், 93, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

— எதிர் மனுதார்,

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு பங்குனி மாதம் 14ந் திகதியன்று முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு தை மாதம் 3ந் திகதி.

மன்றின் ஆணைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைதல்:
**செ. மகேசன்**
மனுதாரின் சட்டத்தரணி
C-624

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ உ.)

## வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தரம்பிரிக்கப்பட்ட 7000வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. வைப்புப்பணமாகரூபா 250/-செலுத்தி விண்ணப்பப் படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் இடதுபக்க மூலையில் ''வெற்றுச் சாக்குகள் கேள்வி'' என எழுதப்பெற்று பொதுமுகாமையாளர் சங்கானை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும் விண்ணப்பமுடிவுத் திகதி: 15-02-1986.

**பொது முகாமையாளர்,**
சங்கானை பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
7-2-86. A-211

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பளை வீமன்காமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அருளானந்தப் பிச்சாட் இராசையாவின் மரணசாதனச் சொத்து பற்றிய விடயம்.
அருளானந்தம் பிச்சாட் இராசையா மறுபெயர் அருளானந்தம் இராசையா. வீமன்காமம். தெல்லிப்பளை.

- காலம்சென்றவர்

வழ. இல. தத்துவம் / 263

கந்தையா யோசெவ் செல்வநாயகம் பெண் அருள் இராசபத்மநாயகி, வீமன்காமம், தெல்லிப்பளை.

-மனுதார்

எதிர்

கந்தையா யோசெவ் செல்வநாயகம், ஏழாலை வடக்கு, சுன்னாகம்.

- எதிர்மனுதார்

மேற்குறித்த இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு காலம்சென்ற அருளானந்தம் இராசையாவின் மரணசாதனத்தை நிருபிப்பதற்காக இந்நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டுள்ளதென்றும், அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை இவ்வழக்கில் பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

இவ்விடயத்தில் அக்கறையுள்ள ஆள் எவரும் மேற்கண்டவாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுன கட்டளை ஆக்கக்கூடாது என்பதற்கு காரணம் ஏதும் இருப்பின் 1986ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றிக்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு மார்கழி மாதம் 27ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

V. S. கணேசலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C657)

# பல சாதனைகள் படைத்தவர்

(சாவகச்சேரி)

''ஒருமனிதனின் மரணத்தின் பின் அவனை நினைத்து அஞ்சலிக் கூட்டம் நடத்தப்படுகிறதென்றால். அவன் ஏதோ ஒரு சாதனையைச் செய்தவனாகத்தான் இருக்கமுடியும் இந்த வகையில் அமரர் சின். சின்னப்புவும் பலசாதனைகளைப் படைத்துள்ளார்.''

இவ்வாறு அண்மையில் அமரரான கைதடி மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் தலைவர் சின் சின்னப்புவின் இரங்கல் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அறவழிப் போராட்டக்குழு உறுப்பினர் ச. தங்கராசா கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்; அமரர் சின் சின்னப்பு கலாசாரம், விளையாட்டு போன்ற துறைகளில் ஆர்வம் கொண்டவர் அவர் எழுதிய நாடகங்கள் பல போட்டிகளில் பரிசு பெற்றதுடன் எமது கிராமத்திற்கும் புகழைத் தேடித்தந்துள்ளனர். அன்னார் எப்பொழுது சந்தித்தாலும் ஒரு விவாத அரங்கையே நடத்திவிடுவார் அரசியல், சமயம் சினிமாபோன்ற எதுவானாலும் அத்துறைகளில் வாதப்பிரதிவாதங்களை 'நிகழ்த்துவதில் அமரர் சின்னப்பு பெரும் தில்லவர்' என்றார்.

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தலைவர் எஸ். சிவலிங்கம் பேசுகையில் ''அமரர் சின்னப்புவின் இழப்பு பெருத்த இழப்பு'' என்றார் மற்றும் சரஸ்வதி ராம அபிவிருத்திச் சங்க தலைவர் வ சின்னத்தம்பு உட்பட பலர் இரங்கல் உரை நிகழ்த்தினார்கள்.


**ROCK** ENGINEERS & CONTRACTORS
in
WATER SUPPLY and IRRIGATION WORKS

சிறந்த நிலவள ஆராய்ச்சியுடன் 24 மணித்தியாலமும் தொடர்ச்சியாக தண்ணீர் பெறக்கூடியதான குழாய்க்கிணறுகள் குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், சிறந்த முறையில், உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

**றெக் என்ஜினியர்ஸ்,**
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
(C 616)


## சித்தவைத்திய கலாநிதி திரு. கோ. சின்னத்தம்பி அவர்களின் அறங்காத்த தர்மபத்தினி

**திருமதி அசுபதி அம்மையாரின்**

## இரண்டாவது நினைவஞ்சலி



அரனடியில்:
01-02-1984
திதி:
08-02-1986

மாற்றமாம் வையகத்தின் வல்வினைகள் தனை நீக்கி பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன்பொற் பூழல்கள் சென்றடைந்தஅன்னையே நின் சமயத்தொண்டும் நீறணி நெற்றியும் எங்கள் நெஞ்சகத்தே நிறைந்திருக்கும்.

உமது பிரிவால்
சந்ததமும் துயருறும்:
கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'பதி இல்லம்'
பளை,
தெல்லிப்பழை. C-630

## 1-வது வருட நினைவஞ்சலி

**திருவிளங்கம் திருச்செல்வம்**

(இளைப்பாறிய புகையிரத நிலைய உத்தியோகத்தர்)



தோற்றம்: 17-11-1935
மறைவு: 20-01-1985

எங்கள் நெஞ்சம் மறவாத அன்பு செல்வமே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் மீளாத் துயில்கொண்டு ஓர்ஆண்டு காலம் நிறைவு பெறும் இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்,
மாமியார், அன்பர்கள்.

சேணியடி,
திருநெல்வேலி. C-626


# YARL HALL
93 A, MAIN ST., JAFFNA.

**A/L 86 வினா-விடை** வகுப்புகள்
ஆரம்பம்: 9-2-86 ஞாயிறு மாலை 1-00 மணி

| | | |
|---|---|---|
| தாவரவியல் | - | திரு. சிவவீரசிங்கம் |
| விலங்கியல் | - | திரு. ஞானேந்திரன் |
| இரசாயனம் | - | திரு. மனோகரன் |
| பௌதிகம் | - | பிரபல ஆசிரியர் |

**A/L 87 பிரயோககணிதம், காவிகள், தூயகணிதம், ஆள்கூற்று கேத்திரகணிதம்**

ஆசிரியர்: திரு. கமலசிங்கம்
சனி / ஞாயிறு 6-15 – 8-15 ஆரம்பம்: 9-2-86
**A/L 88** ஆரம்பம்: 8-2-86 சனி 12-00 மணி
(C 633)



## பிரயாண வசதி

★ கனடா ★ மேற்கு ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு
விசாவுடன் எங்கள் முகவர்
உங்களை அழைத்துச் செல்வார்.
அத்துடன்
பாஸ்போட், BOND
சகல நாடுகளுக்குமான
விமான ரிக்கற்றுகளும்
செய்து கொடுக்கப்படும்.

# GROUP ATLANTIC TRAVELS

(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
(A 212)



## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## ஒரு நியாயமான தீர்வுக்கு இந்திய மா.க்ம்யூ.க. ஆதரவு!

### மாநாட்டில் தீர்மானம்

(புதுடில்லி)

இந்திய மார்க்ஸியக் கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத தமிழ் மக்களின்உரிமைகளுக்கு ஆதரவாகவும், இனப்பிரச்னேக்கு ஒரு நியாயமான தீர்வைக் காணுவதற்கும் இந்திய மக்களின் ஆதரவைத்திரட்டுமாறு தனது மாநில அமைப்புகளைக் கோரியுள்ளது.

இது சம்பந்தமான ஒரு தீர்மானம் அண்மையில் நடைபெற்ற இக்கட்சியின் 12வது மாநாட்டில் எடுக்கப்பட்டது. இத்தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை யாவன.

''திம்புப் பேச்சுவார்த்தைகள் ஒரு அமைதித்தீர்வுக் வழிவகுக்கக் கூடியதாயிருந்தும், பேச்சுவார்த்தைகளுக்கிடையே இருந்த காலவரையறையில்இலங்கைஅரசாங்கம் மேன்மேலும் தனது ராணுவ வலிமையைப் பெருக்கி யுத்த நிறுத்த உடன்பாட்டையும் மீறி, அப்பாவித்தமிழர்களேப் படுகொலே செய்து வந்துள்ளமை கண்டனத்துக்குரியது. இலங்கை அரசாங்கம் இப்பிரச்னேக்கு ராணுவத்தீர்வொன்றைக் காணமுற்படுகிறது. இதன் மூலம் மிகவும் மோசமாகியுள்ள பொருளாதாரத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழாமல் திசைதிருப்ப முயல்கிறது.

''இப்பிரச்னேக்கு இலங்கை அரசாங்கம் இராணுவத்தீர்வொன்றைக் காண முயல்வதனுல் அது அமெரிக்காவிடம் அதிகளவு தங்கியிருக்க வேண்டியநிலே ஏற்பட்டுள்ளது. இதனேப்பயன்படுத்தி அமெரிக்கா திருகோணமலேத் துறைமுகத்தைத்தனது ராணுத்தின் தளமொன்ருக்கிபுள்ளது. இது இலங்கையின் ஒருமைக்கு மட்டுமன்றி, இந்தப் பிராந்தியத்தின் அமைதிக்கும் அச்சுறுத்தலாகவுள்ளது.

''ஈழக் கோரிக்கையானது இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களின் நியாயமான அபிலாஷைகளே ஒடுக்க முயலும் ஜே. ஆர். அரசாங்கத்துக்கு துணேபோவதாயுள்ளது.

''எமது மாநாடு தமிழர்விடுதலேக்கூட்டணி சமர்ப்பித்துள்ள யோசனேகள் இப்பிரச்னேயை தீக்க ஏதுவாக உள்ளன எனக்கருதும் அதே வேளேயில், இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்பும் வகையில் அங்கு சுமுக நிலே தோன்ற முயற்சிகளே மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தைக்கேட்டுக் கொள்கிறது.

''எமது கட்சி இலங்கையில் துன்பத்துக்காளாயிருக்கும் தமிழ் மக்களுக்கு எமது ஆதரவைத்தருவதுடன் சிறுபான்மைத் தமிழர் உட்பட சகல இடதுசாரி, ஜனநாயக ஸ்தாபனங்களேயும் இப்பிரச்னேக்கு ஒரு நியாயமான தீர்வு கானப் போராடுமாறுகேட்டுக் கொள்கிறது.''

### பருத்தித்துறை பிரஜைகள் குழு அவசரக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறையில் இம்மாதம் 5ம் திகதி நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக, இறந்தவர்களின் உறவினர்கள், காயமடைந்தவர்கள் (அல்லது அவர்களின் உறவினர்கள்), உடமைகள் பாதிக்கப்பட்டோர், வீடுகள், கடைகள் பாதிக்கப்பட்டோர், அனேவரையும் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்னி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலே4 மணிக்கு தவருது பிரஜைகள் குழுவைச் சந்திக்கும்படி, அதன் தலேவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

### இஸ்ரேலின் போக்கு பற்றி யாழ். இஸ்லாமிய இளேஞர் அமைப்பு கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

'இஸ்ரேல் பள்ளிவாசலில் அநாகரிகமான செயலே செய்கிருர்கள். புனித பொருள் ஆராய்ச்சி என்ற போர்வையில் அந்த புனித பள்ளிவாசலின் ஒருபகுதியை குண்டுவைத்துத்தகர்த்தார்கள். அந்த நேரம் உலகமுஸ்லிம்கள் அனேவரும் பெரும்அதிர்ச்சிக்குள்ளானுர்கள்.

யாழ்ப்பாணம் இஸ்லாமிய இளேஞர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: 'இந்தச்செயலுக்கு எதிராக பாலஸ்தீன இளேஞர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டங்களேயும், தாக்குதலேயும், இஸ்ரேலுக்கெதிராக நடத்தினுர்கள். தற்போது இந்தப் புனித பள்ளிவாசலே தங்கள் உறைவிடமாகப்பயன்படுத்துவதற்கு முயற்சிக்கிருர்கள்.

'மனிதகுலத்திற்கு நிம்மதியான ஒரு நேரம் இறைவணக்கம். இந்தப்புனித பள்ளிவாசலில், இறைவணக்கம் செய்யும் எமது பாலஸ்தீன சகோதரர்களே இஸ்ரேல் கூலிப்படைகள் துன்புறுத்திவருகிருர்கள். இதனுல் உலக முஸ்லிம்கள் அனேவரும் இஸ்ரேலுக்கு எதிரான எதிர்ப்பை பல கோணங்களில் காட்டி வருகின்ருர்கள். நமது நாட்டிலும்கூட இஸ்ரேலின் உளவுப்படையான மொசாட் தங்களது கொடூரசெயலே, அடக்கி ஒடுக்கப்படுகின்ற மக்களுக்கு எதிராக பயன்டடுத்துகிருர்கள். புனிதபள்ளிவாசலேயும், சொந்த நாட்டையும் மீட்பதற்கு போராட்டமே சிறந்தது [க]

### கடைகள் உடைத்து கொள்ளே!

(முல்லேத்தீவு)

முல்லேததீவு நகரில், பதற்ற நிலேயால் மூடப்பட்டிருந்த சில கடைகள் உடைக்கப்பட்டுக் கொள்ளேயடிக்கப்பட்டுள்ளன. [மா]

### யார் இவர்?

(யாழ்ப்பாணம்)

அடையாளம் காணப்படாத வயோதிபரின் சடலமொன்று யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன்னர், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கு மரணமானுரென்று கூறப்படுகிறது. [க]

### மாணவி கடத்தல்: செட்டியார்சங்கம் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''எமது இனத்தைச்சேர்ந்த மாணவி ஒருவர் கடத்தப்பட்டது சம்பந்தமாக நியாயமான தீர்ப்பு வழங்கப்படாவிட்டால் சென்னேயில் உள்ள எமது தலேமைச்சங்கம் ஊடாக தமிழ் நாடு அரசுடனும், தமிழ் நாடு அரசில் எம் இனத்தின் சார்பாக உள்ள அமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள், அனேத்து இந்தியக்கட்சித் தலேவர்களுடனும் தொடர்பு கொண்டு, மேல் நடவடிக்கை எடுக்கவேண்டிய துர்ப்பாக்கியமான சூழ்நிலே ஏற்படும்.''

இவ்வாறு யாழ். நகரிலுள்ள செட்டியார் இனத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் கடத்தப்பட்டது சம்பந்தமாக, 'யாழ். நகர் 24 மனே செட்டியார் மகாஜன சங்கம்' விடுத்துள்ள அறிக்கையில் கவலே தெரிவித்துள்ளது.

கடந்த 3ம் திகதி நண்பகல் முதலுதவிப் பயிற்சி நெறிக்கு சென்றுவிட்டு எமது இனத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் திரும்பும்பொழுது நான்கு இளேஞர்களால் கடத்தப்பட்டுள்ளார். புனிதமான இயக்கங்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு நீதிவிசாரணே ஒன்றை நடத்தி நியாயமான தீர்ப்பை அளிக்கவேண்டும்'' என்றும் அவ்வறிக்கையில் மேற்படி சங்கச்செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். [மா]

### கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ் 3ம் குறுக்குத்தெருவிலுள்ள வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றிரவு கடத்தப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலேயாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புநோக்கிச்சென்ற பஸ்ஸிருந்த இளம் பெண் ஒருவரும் யாழ் செயலகத்துக்கண்மையில் வைத்துக் கடத்திச்செல்லப்பட்டுள்ளார். [மா]

### மகாபொல புலமைப் பரிசு

(யாழ்ப்பாணம்)

மகாபொல புலமைப் பரிசில் பெறுவதற்குச் செல்லவிருக்கும் யாழ் பல்கலேக்கழக முதல்வருட மாணவர்களுக்கு ஏற்ற ஒழுங்கு வசதிகள் குறித்து இம்மாதம் பதினுெராம் திகதி நண்பகல் 12 மணியளவில் யாழ். பல்கலேக்கழக கைலாசபதி கலேஅரங்கில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

யாழ். பல்கலேக் கழகத்திலிருந்து மகாபொல புலமைப் பரிசில் பெறுவதற்கு கொழும்பு செல்லவிருக்கும் 386 மாணவர்களில் 252 மாணவர்களே பிரயாண - தங்குமிட வசதிகள் செய்து தருமாறு மாணவர் அவை அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனராம்.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் இம்மாதம் 2ம் திகதி இன்டர்சிற்றி ரயிலில் பிரயாணம் செய்யக்கூடியதாக யாழ். புகையிரத நிலேயத்தில் அல்லது கோட்டையில் ரிக்கற் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வைபவத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பிதழ் பெருத மாணவர்கள் மாணவர் அவை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி பாறிக்குட்டி ஆறுமுகம் (பாட்டக்கா)

திருமதி பாறிக்குட்டி ஆறுமுகம் (பாட்டக்கா) காலமானுர். இவர் ஈசுவரதேவி, பேரின்பநாயகம், இராஜேஸ்வரி, பேரானந்தநாயகம் அவர்களின் அன்புத்தாயாரும், வேதநாயகம், சொக்கலிங்கம், கௌசாம்பிகை, கீதாஞ்சலி அவர்களின் அன்பு மாமியாருமாவார். அன்னுரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து இன்று (08-02-86) பி. ப. 4 மணியளவில் கருகம்பன் மயானத்திற்கு தகனக்கிரியைக்கு எடுத்துச் செல்லப்படும். ஆ. பேரின்பநாயகம்
ஞானந்தோட்டம், புலோலி தெற்கு, (C 649)

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

ஆனேப்பந்தி சின்னத்தம்பி சுப்பிரமணியம் காலமானுர் அன்னுர் சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளே தம்பதியினரின் புதல்வரும், ஆனேப்பந்தி தேனீர்க்கடை உரிமையாளர் சுப்பிரமணியம் அன்னலெட்சுமியின் அருமைக்கணவரும், காலஞ்சென்ற புஷ்பராணி, விஜயராணி, சிறீபதிநாதன், ஜெயராணி, விமலநாதன் (கிறீஸ்)' சுரேந்திரராணி ஆகியோரின் அன்புத்தந்தையும், பாலசுந்தரம் (அஸ்வினி அரிசி ஆலே, வவுனியா) அவர்களின் அன்பு மாமனுரும், நிஷாந்தன். முரளி, ஜனுர்த்தனன் சுதர்சன், சிவகரன், அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் (8-02-86) சனிக்கிழமை பி. ப. 4 மணியளவில் 99, பலாலி வீதி, கந்தர் மடத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று அன்னுரின் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திறகு எடுத்துச் செல்லப்படும். தகவல்:
(C 650) சு. சிறீபதிநாதன்

### அதிவண. குலேந்திரன் கட்டுரை தொகுப்பு

[யாழ்ப்பாணம்]

அதிவண.எஸ்.குலேந்திரனே கௌரவிக்குமுகமாக அவரின் கட்டுரைத் தொகுப்பும் நூல் தொகுப்பும் எதிர்வரும் திங்கட்கிழமை 10ம் திகதி மாலே 3-30 மணியளவில் பரியோவான் கல்லூரியில் பேராயர் டி. ஜே. அம்பலவாணர் தலேமையில் வெளியிடப்படவுள்ளது.

சமய, சமூகப் படிப்புக்கான கிறிஸ்சவ ஸ்தாபனத்தினரால் வெளியிடப்படும் இத்தொகுப்பை திரு. எஸ். ஜெபநேசன் அறிமுகப்படுத்திவைப்பார்.

பேராயர் பீ. தியோகுப்பிள்ளே, பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரும் உரை நிகழ்த்துவர்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 003/81 Eelanadu P. O. Box 49 Telegram Eelanadu, Telephone 22389 24126.

### கம்பன் தமிழ்க்கோட்டம்: திங்கள் அடிக்கல்நாட்டுவிழா

[யாழ்ப்பாணம்]

தமிழரின் கலே, கலாசாரம் பண்பாடு போன்றவற்றைப் போற்றிப்பாதுகாப்பதற்கென அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் நிறுவும் 'கம்பன் தமிழ்க்கோட்டம்' நல்லூரில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டுவிழா நாளே மறுதினம் திங்கட்கிழமைமாலே 4மணிக்கு நடைபெறும்;

யாழ் மாநகரசபை ஆணேயாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம், வடஇலங்கை மருத்துவக் கல்லூரி ஆளுனர்சபைத் தலேவர் டாக்டர் ரி செங்காதரன், நாதஸ்வரக் கலேஞர்கள் வி. கே. கானமூர்த்தி, என். ஆர். சுந்தரமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி, மற்றும் பலர் இந்நிலேயத்துக்கான அடிக்கல்லே நாட்டுவார்கள்.

நல்லே திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறும் இவ் வைபவத்துக்கு யாழ். பல்கலேக்கழகத் துணேவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலேமைதாங்குவார்,

பிரபல பாடசாலேகளின் அதிபர்கள், தொழில் அதிபர்கள் மங்களவிளக்கேற்றிவைக்க ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார் 'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர் திரு. என் சபாரத்தினத்தின் தொடக்கவுரையைத் தொடர்ந்து வாழ்த்துரைகள் இடம்பெறும்.

பத்திரிகை, சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், ஆலய நிர்வாகிகள், மற்றும் பொதுஸ்தாபன உறுப்பினர்கள் வாழ்த்துரைகள் வழங்குவார்கள். (ஐ)

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

வந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்.

இவருடனிருந்த மற்றுமிருவர் காயங்களுக்குள்ளாகி ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org